DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | |
|---|---|---|
| Calender | | |
| Miscellaneous | Case No | CC 3/12 |
| Priliminary Register | | |
| Sessions | | |
| | Prosecution | PW 1 |
| Deposition of witness for | Defence | |
| | Court | |
| Name | | Mercy Annapoorani |
| Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

15.02.2019 முதல் விசாரணை:

தமிழ்நாடு சமூக சேவா சங்கம் என்ற சங்கம் 1969ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் தேதி தமிழ்நாடு சொசைட்டி ரிஜிஸ்ட்ரேசன் ஆக்ட் படி பதிவு பெற்ற நிறுவனமாக இயங்கி வருகிறது. இச்சங்கமானது திரு. தங்கமணி நாடார் என்பவரால் நிறுவப்பட்டு அதன் தலைவராக செயல்பட்டு வந்தார். திரு. எஸ் ராமசாமி என்பவர் இச்சங்கத்தின் செயலாளராக செயல்பட்டு வந்தார். கடந்த 31.05.1998 அன்று திருமதி. எஸ் மெர்சி அன்னபூரணி ஆகிய நான் அடிப்படை உறுப்பினராக சங்கத்தில் திரு. ராமசாமி அவர்களால் அனுமதிக்கப்பட்டேன். அதே ஆண்டு 31.07.1998 இச்சங்கத்தின் செயலாளராக நிர்வாக குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்க பதிவுச் சட்டத்தின் கீழ்முறையாக பார்ம் 7ன் படி மதுரை மாவட்ட சங்க பதிவாளர் அலுவலகத்தில் கோர்வை செய்யப்பட்டது. அடுத்த வருட் 22.08.1999 அன்று திரு. ராமசாமி. திருமதி அன்னபூரணியாகிய என்னையும் மற்ற 32

சங்க உறுப்பினர்களையும் சங்கத்திலிருந்து நீக்கி விட்டதாக மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு தகவல் அனுப்பினார். 12.09.1999 அன்று சங்க சட்ட விதிகளின் படி முறையாக சர்க்குலர் அனைத்து உறுப்பினர்களுக்கும் அஜெண்டா மற்றும் சங்க கூட்ட அறிக்கையை தபால் மூலம் அனுப்பி கூட்டம் நடத்தப்பட்டு திரு. எஸ் ராமசாமி அவர்களை தலைவர் பதவியிலிருந்தும் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் மற்றும் 17 சங்க உறுப்பினர்களையும் சங்கத்திற்கு எதிராக செயல்பட்ட காரணத்தினால் அவர்கள் பதவியிலிருந்து நீக்கம் செய்து படிவம் 7 மற்றும் படிவம் 6ன் படி மாவட்ட சங்க பதிவாளருக்கு கோர்வைக்கு அனுப்பப்பட்டது. இதை எதிர்த்து திரு ராமசாமி அவர்கள் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் ஓ எஸ் எண. 938.'.1999 படி வழக்கு தாக்கல் செய்து அதன் பின் அது திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாறுதலாகி ஓ எஸ் எண். 504.'.2004 படி வழக்கு நடைபெற்று 13.09.2004 அன்று வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டு தீர்ப்பில் திரு. ராமசாமி அவர்கள் சங்க தலைவராகவும், மெர்சி அன்னபூரணியாகிய நான் செயலாளராகவும் 48 சங்க உறுப்பினர்களை கொண்டு சங்கம் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பபை எதிர்த்து மதுரை மாவட்ட நீதுிமன்றத்தில் மேல் முஜறயீடு செய்யப்பட்டு அந்த வழக்க தள்ளுபடி செய்யப்பட்டது. எற்கனவே திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஏற்பட்ட தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இதற்கு அடுத்தாற்போல் மதுரை உயர் நீதிமனற கிளையில் மேல் முறையீடு செய்து அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு ஓஎஸ். 504.'.2004ன் தீர்ப்பின் படி செயல்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது, இந்த தீர்ப்புகளின் படி சங்க செயலாளராக நான் இன்று வரை செயல்பட்டு வருகிறேன். இதற்கிடையில் மதுஜர மாவட்ட சங்க பதிவாளரிடம் படிவம் 7 ஒன்று திரு. ராமசாமி சமர்ப்பித்து அதில் தமிழ்நாடு சமூக சேவா சங்கம் கலைக்கப்பட்டதாகவும், இந்த சங்கத்தை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு ரூபாய் 49500க்கு குத்தகைக்கு விடப்பட்டதாக கள்ளிக்குடி சார்பதிவாளரிடம் இரண்டு ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது. 5954, 59 ஆக பதிவு செய்யப்பட்டு மாவட்ட பதிவாளரிடம் அனுப்பப்பட்டது. இதற்கு ஆட்சேபணை மனு செயலாளராகிய நான் மாவட்ட பதிவாளரிடம் அளித்து இரண்டு பேருடைய படிவம் 7 ஐயும் பரிசீலித்து சித்தர் கூடம் அறக்கட்டளை என்ற நிறுவனத்திற்கு குறிப்பாக திரு. எஸ் ராமசாமியின் பேரன் மேமேஜிங் டிரெஸ்டியாக இருக்கும் அறக்கட்டளைக்கு ஒரு கோடிக்கும்

மேலாக சொத:துக்களைக் கொண்ட தமிழ்நாடு சமூக சேவா சங்க சொத்துக்களை மிகக்குறைந்த குத்தகைக்கு விடப்பட்டதை சங்கப்பதிவாளர் ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து 504.்.04 வழக்கின் தீர்ப்பின்படி செயல்பட ராமசாமி தலைவராகவும் நான் செயலாளராகவும் செயல்படவேண்டும் என்று இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் திரு. ராமசாமி அதன் படி செயல்படாமல் தமிழ்நாடு சமூக சேவா சங்கம் என்ற நிறவனத்தையே இல்லாததுபோல் ஒரு நிலை ஏற்படுத்தி சட்டத்திற்கு மாறாக ஒரு பதிவு பெற்ற சங்கத்தை இன்னொரு பதிவு பெற்ற அறக்கட்டளையாக சங்க விதிகளின் படி செயல்படுத்தக்கூடாது என்று தெரிந்தும் தற்போது வரை சித்தர் அறக்கட்டளை கூடம் என்ற பெயரில் தன் பேரனால் நடத்தப்படுவதாக ஒரு மாயையை உருவாக்கி வருகிறார். தமிழ்நாடு சமூக சேவா சங்கத்தின் கீழ் சேவா ஆரம்பப்பள்ளி என்ற ஒரு அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியை தற்காலிகமாக மூடப்படவேண்டும் என்று மாவட்ட கல்வி அலுவலர் அவர்களுக்கு எழுதி அந்த பள்ளியை இயங்க விடாமல் செய்து வருகிறார். சென்னையில் உள்ள தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் கீழ் செயல்பட்ட 3 குழந்தைகளுக்கான கிரெச்சை நடைபெற விடாமல் நிறுத்தி வைத்துள்ளார். (ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வேறு தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)